செய்தி வெளியீடு எண் 25 நாள் 10.01.2017

**திருவள்ளுர் மாவட்டம், பழவேற்காட்டில் வர்தா புயலால் சேதமடைந்த மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை பொன்னேரி வட்டத்திற்கு உட்பட்ட 2,673 பயனாளிகளுக்கு ரூபாய் 4 கோடியே 42 லட்சத்தி 80 ஆயிரத்திற்கான நிவாரண தொகை வழங்குவதற்கான ஆணைகளை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்கள், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் வழங்கினார்கள்.**

~~~~~

திருவள்ளுர் மாவட்டம், பழவேற்காட்டில் வர்தா புயலால் சேதமடைந்த மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை பொன்னேரி வட்டத்திற்கு உட்பட்ட 2,673 பயனாளிகளுக்கு ரூபாய் 4 கோடியே 42 லட்சத்தி 80 ஆயிரத்திற்கான நிவாரண தொகை வழங்குவதற்கான ஆணைகளை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்கள், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் இன்று (10.01.2017) வழங்கினார்கள்.

பயனாளிகளுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்கான ஆணைகளை வழங்கி, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது "மாண்புமிகு மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, வர்தா புயலால் சேதமடைந்த மீனவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்ததை தொடர்ந்து, அவர்களுக்கு நிவாரண உதவித்தொகைகளை அரசு வழங்கி வருகிறது. மொத்தம் ரூ.9,61,55,000 (ரூபாய் ஒன்பது கோடியே அறுபத்தி ஒன்று லட்சத்தி ஐம்பத்தி ஐந்தாயிரம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வழங்கப்படவுள்ளது. பொன்னேரி வட்டத்தில் 35 மீனவ கிராமங்களைச் சேர்ந்த 2,673 பயனாளிகளுக்கு முழுமையாக சேதமடைந்த ஒரு கண்ணாடி நாரிழை படகு (FRP) ரூ.75,000/- மற்றும் பகுதி சேதமடைந்த 347 படகுகளுக்கு ரூ.69,40,000/-, 39 கட்டுமரங்களுக்கு ரூ.3,90,000/-, 2,044 இயந்திரங்களுக்கு ரூ.1,02,20,000/- மற்றும் 2,673 வலைகளுக்கு ரூ.2,67,30,000/- சேர்த்து மொத்தம் ரூ.4,42,80,000/-க்கான (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தி இரண்டு லட்சத்தி எண்பதாயிரம்) நிவாரணத் தொகை வழங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மீனவர்களின் வாழ்வாதாரம் அமைவதற்காக தமிழக அரசு சிறப்பு உதவித்தொகைகளையும் வழங்கி வருகிறது. அவர்களுக்கு மீன்பிடி குறைக்காலம், மீன்பிடி தடைக்காலம் என அனைத்து வகையான உதவித்தொகைகள் வழங்கப்படுகிறது. இவை அனைத்தும் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு, காப்பாற்றப்பட்டு வருகிறது" என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளுர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, பொன்னேரி சார் ஆட்சியர் திரு.வி.பி.தண்டபாணி, இ.ஆ.ப., இணை இயக்குநர் மீன்வளத்துறை திருமதி.ந.சந்திரா, உதவி இயக்குநர் மீன்வளத்துறை திரு.சி.வெங்கடாசலம் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.
~~~~~